B

# அறிவித்தல்

சில பாராளுமன்ற உறுப்பினர்களினால் அரசாங்கத்தின் பல்வேறு உயர் பதவிகளை வகிக்கும் அதிகாரிகள் தொடர்பில் எவ்வித அடிப்படையும் இன்றியும், உறுதிப்படுத்த முடியாத விடயங்களின் அடிப்படையிலும் தமது தனிப்பட்ட நலன்களுக்காக அவர்களது கடமைசார்ந்த தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகளை சவாலுக்குட்படுத்தி இந்த உயர் சபையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் விமர்சிக்கும் போக்கு அண்மைக்காலங்களில் அதிகரித்துவருவதை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டுவர நான் விரும்புகிறேன்.

இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் அடிப்படையின்றி வெளியிடப்படும் அவ்வாறான அறிக்கைகளினால் மேற்படி அரச அதிகாரிகளின் நற்பெயருக்கும் தொழில் கௌரவத்திற்கும் பாதிப்பு ஏற்படுவதோடு, அவ்வாறான கூற்றுக்கள் தொடர்பில் பதிலளிக்கும் வாய்ப்பு அந்த அதிகாரிகளுக்கு இல்லாததனால் அவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதையும் அதைரியமூட்டப்படுவதையும் நான் அவதானிக்கிறேன்.

மேலும், இதுபோன்ற அறிக்கைகள் குறித்து அந்த அதிகாரிகள் தங்களது ஆழ்ந்த கரிசனையைத் தெரிவித்து எனக்கு எழுத்துமூலமாக விடயங்களை முன்வைத்திருப்பது குறித்தும் இங்கு விசேடமாக குறிப்பிட விரும்புகிறேன்.

அரச அதிகாரிகள் தொடர்பில் விமர்சனங்கள் இருப்பின், அந்த அதிகாரிகளை பாராளுமன்றத்திற்கு வரவழைத்து, அதுபற்றி விசாரணைசெய்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வாய்ப்பு இருப்பதால், இந்த சபையில் அவ்வாறான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து அவர்களை சவாலுக்குட்படுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

மேலும், நிலையியற் கட்டளை 91(எ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம், அவ்வாறான அவதூறு அல்லது தவறான அறிக்கைகள் ஹன்சார்ட் அறிக்கையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மேலும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.